# மென்தமிழ்

## கணித்திரையில் இனித்தமிழ்

இணைய இதழ் ஆவணி 2008



61 வது இனிய
சுதந்திர தின
நல்வாழ்த்துக்கள்



## ஆசிரியர்கள்

**நிலாரசிகன்**

www.nilaraseeganonline.com

nilaraseegan@gmail.com

**விழியன்**

www.vizhiyan.wordpress.com

vizhiyan@gmail.com

**ரசிகவ் ஞானியார்**

www.nilavunanban.blogspot.com

rasikow@gmail.com

**சிவா**

www.srishiv.blogspot.com

sivasankar.iitg@gmail.com

**எழிலன்பு**

indrapathy@gmail.com

## ஆலோசனை

**மஞ்சூர் ராசா**

sundarnb@gmail.com

## வடிவமைப்பு

**ஜே.சையத் அலி**

www.4creativeweb.com

jsyedali@gmail.com

கதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. கதை கட்டுரைகளை திருத்தி அமைக்கவும் சுருக்கவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.

படைப்புகளை அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி:

mentamil@gmail.com

| | | |
|---|---|---|
| அன்பர்களுக்கு வீர வணக்கம் | விழியன் | பக் 4 |
| கருப்பு ரோஜா - கட்டுரை | நிலாரசிகன் | பக் 5 |
| கணினி கலைச்சொற்கள் | விழியன் | பக் 7 |
| மழையில் நனையும் இரவு | க.அம்சப்ரியா | பக் 7 |
| சென்னை இணைய நண்பர்கள் சந்திப்பு - ஒரு பார்வை | சுவாதி | பக் 8 |
| உலகின் முதல் இணைய தளம் - கட்டுரை | பிரேம்ஜி | பக் 10 |
| வாழ்க்கைப் பாடம் | ஷைலஜா | பக் 11 |
| கி. ராஜநாரயணன் தொகுத்த கு.அழகிரிசாமி சிறுகதைகள் | | பக் 12 |
| யூ-ட்யூப் வீடியோவை இணையிறக்கம் செய்வது எப்படி? | தமிழ்நெஞ்சம் | பக் 13 |
| மக்கள் எழுச்சியும் மலரும் நினைவுகளும், தமிழ்மொழி மீட்டுருவாக்கம், கல்விமுறை களவுபோகும் உரிமை | தமிழ்நாடன் | பக் 14 |
| **XP -** ஹைபர்நேட் | அமிர்தராஜ் | பக் 18 |
| பிஞ்சுக் கரங்களில் தாய்மை | மங்கை | பக் 20 |
| பேசும் மீன்கள் | அய்யனார் | பக் 25 |
| எதிர்வினை | ரசிகவ் ஞானியார் | பக் 26 |
| எழுதுகோல் - ஒரு பழைய சிந்தனை புதிதாக | விழியன் | பக் 31 |
| தாய்நாட்டின் அகதிகள் - கட்டுரை | சிவா | பக் 34 |
| ஊர்மிளையின் புலம்பல் | லாவண்யா | பக் 37 |
| சுவடுகளின் நர்த்தனம்... | நிலாரசிகன் | பக் 39 |
| தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடத்தும் “கந்தர்வன் நினைவு சிறுகதைப் போட்டி -2008” | | பக் 40 |
| புத்தக அறிமுகம் | | |
| ஒரு பட்டாம்பூச்சியின் கனவுகள் | நிலாரசிகன் | பக் 41 |
| சிற்றிதழ் அறிமுகம் | | |
| நெய்தல் | க.அம்சப்ரியா | பக் 42 |
| இருதயத்திற்கு இருதயம் தேவை | | பக் 44 |

அன்பர்களுக்கு வீர வணக்கம்

வரும் ஆகஸ்ட் 15ஆம் தியதி அறுபத்தி ஒன்றாம் சுதந்திர தினவிழாவினை கொண்டாடப் போகின்றோம். அனைவருக்கும் சுதந்திர தின வாழ்த்துகள். "இரவில் கிடைத்தது சுதந்திரம் - இன்னும் விடியவேயில்லை" என்றான் ஓர் கவிஞன். ஆனால் நிலைமை மாறிக் கொண்டு தான் இருக்கின்றது.

விடியல் வெகு தூரமில்லை. இதோ வந்து விட்டது. இளைஞர்களின் கண்களில் விடியலுக்கான தேடுதல் துவங்கிவிட்டது. முன்னேற வேண்டியது எல்லா துறைகளிலும் தான். அதற்கான முனைப்புகள் இருந்து கொண்டே இருக்க வேண்டும். இடர்களை வேரோடு களைதல் வேண்டும். பல்துறை வல்லுனர்கள் தேசத்திற்காகவும் தங்கள் நேரத்தை ஒதுக்க வேண்டும். இளைஞர்களும் தங்கள் வேலைபளு குடும்ப பாரம் இதையும் தாண்டி இந்த தேசத்தின் பாரத்தையும் தோளில் சுமக்க வேண்டும். சிறு துளி பெரு வெள்ளம். இளைஞர்களின் சக்தி அவர்களுக்கு இன்னும் தெரியாது. உங்களால் முடிந்த சேவையினை செய்து கொண்டே இருங்கள் வேறு வேறு விதங்களில் முடிந்த வகையில்.

இந்தியா தனது முதல் தங்கத்தை ஒலிம்பிக் பந்தயங்களில் பதித்துள்ளது. அபினவ் பிந்ராவை நாடே போற்றுகின்றது. ஒவ்வொரு மாநிலமும் பரிசுகளை அறிவிக்கின்றது. மகிழ்ச்சி வெற்றிபெற்றவரை மட்டுமே கொண்டாடினால் என்ன பயன். வெற்றி பெற துடிக்கும் மனசுகளையும் நாமும் இந்த அரசும் ஊக்குவிக்கவேண்டும். அவர்களுக்கு வேண்டிய உதவியினை செய்ய வேண்டும். நிச்சயம் இருபத்தி ஒன்பதாம் போட்டியில் முதல் தங்கம் பெருமை தான் ஆனால் போதாது.

மென்தமிழுக்கு நீங்கள் தரும் ஊக்கமும் விமர்சனங்களும் எங்களுக்கு உரமும் வரமும். மேலும் ஆர்வமாய் உழைக்க உந்து சக்தியை தருகின்றது. உங்களின் தட்டல்களும் குட்டல்களும் என்றென்றும் வேண்டி

மென் தமிழ் ஆசிரியர் குழு

**(விழியன்)**

## கறுப்பு ரோஜா - கட்டுரை

அவள் பெயர் எனக்குத் தெரியாது. அவள் ஊர் எனக்குத் தெரியாது.அவளைப் பற்றி எந்த ஒரு தகவலும் எனக்குத் தெரியாது. “யாரோ ஒருத்தி” என்று வேண்டுமானால் சொல்லலாம்.

ஆனால் அவள் என்னுள் ஏற்படுத்திய மாற்றம் மிகப்பெரியது. அவளைச் சந்தித்து ஏழு வருடங்களுக்கு மேலாகிவிட்டது. இப்போது எங்கே எப்படி இருக்கிறாளோ அந்த கறுப்பு தேவதை! தினம் தினம் வதை படுவதால் அவளை தே“வதை” என்கிறதோ என் மனம்?

அப்போது நான் இளநிலை முதல் வருட கல்லூரி மாணவன். கல்லூரிக்கு நண்பர்களுடன் பேருந்தில் செல்லும் காலங்கள் மிக மிக அற்புதமானவை. எங்களுக்கு பிடித்த பாடல்களை மட்டுமே ஒலிபரப்புவார் நாங்கள் பயணிக்கும் பேருந்து நடத்துனர். கேலியும், கிண்டலுமாய் பாடிக்கொண்டு பேருந்தில் பயணித்த நாட்கள் மிக அழகானவை.

அன்றொருநாள் அப்படி வந்து கொண்டிருந்த போது பேருந்து பச்சை விளக்குக்காக காத்திருந்த பொழுதில் ஜன்னல் வழியே அந்தக் காட்சியைக் கண்டேன்.

ஒரு பெண்ணை அவள் கணவன் அவள் முடியை பிடித்து தர தரவென்று இழுத்துக் கொண்டு சென்றான். அவள் கதறுகிறாள் தன் கையில் கதறுகின்ற குழந்தையுடன். அந்த இரக்கமற்ற கணவன் ஒரு குடிகாரன். அவன் கட்டியிருந்த வேட்டி மட்டுமே வெள்ளையாக இருந்தது. அவளை சாலையோரம் தள்ளிவிட்டு, கீழே கிடந்த ஒரு தென்னை மட்டையால் அடிக்கத் துவங்குகிறான். பனித்துளிகளை பூக்கள் தாங்கிக்கொள்ளும் இந்த பாறாங்கல்லை? அவன் அடிதாங்காமல் தன் குழந்தையை தவறவிடுகிறாள் அந்த இளம்தாய். இதையெல்லாம் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அப்போது அந்த வழியே சென்ற ஒருவர் தன் வண்டியில் இருந்து கீழிறங்கி அவனைத் தடுத்து அவனை தள்ளி விடுகிறார். குடித்திருந்த காரணத்தினால் தடுமாறி விழப்போனான் அந்த மதியிழந்த மனிதன். அப்போது தரையில் கிடந்த அவன் மனைவி ஓடிச் சென்று

அவனைத் தாங்கி பிடித்துக் கொண்டாள். தான் அடிபட்டாலும் தன் துணைவன் அடிபடக்கூடாது என்று நினைத்தாள் அந்த புண்ணியவதி.

அதற்குள் பச்சை விழுந்ததால் புறப்பட்டது எங்கள் பேருந்து...

நடந்தவற்றை எல்லாம் மௌனமாய் நினைத்துக்கொண்டே என் கல்லூரியில் வந்து இறங்கினேன். அப்போது என்னுள் ஏற்பட்ட சில கேள்விகளுக்கு இப்போதும் விடை கிடைக்கவில்லை எனக்கு.

1) ஏன் என்னால் பேருந்தை விட்டு இறங்கிச் சென்று அவனை அடிக்க முடியவில்லை? (அப்போது நான் சொல்லிக் கொண்ட காரணம், குடிகாரனை அடிப்பது செத்த பாம்பை அடிப்பது போல்)

2) அடிக்காவிட்டாலும் தடுத்திருக்கலாமே? ஏன் முடியவில்லை என்னால்?

3) “நமக்கேன் வம்பு” என்று என்னை ஒதுங்கச் செய்தது எது?

4) தாய்வீட்டை விட்டு, சொந்தம் விட்டு, சொந்த ஊரை விட்டு தாலிகட்டிய தன்னுடன் வருகின்ற தன் மனைவியை அடிப்பவன் ஒரு மனிதனா?

இன்று அந்த பெண் எங்கிருக்கிறாளோ, என்ன துயரில் இருக்கிறாளோ! அந்த கறுப்பு ரோஜா முள்ளுடன் அல்லவா வாழ்கிறது. அன்று அவன் அடித்தபோது அவளுக்கு மட்டும் வலித்தது. இன்று நினைக்கின்ற போதே வலிக்கிறது எனக்கு.

இந்தியா சுதந்திரம் பெற்று 61 வருடங்கள் ஆன பின்னரும் இவள் போன்று எத்தனை எத்தனை ரோஜாக்கள் ஆண் வர்க்கத்தின் இரும்புக் கரங்களுக்கு அடிமையாக ஊமையாக அழுது கொண்டிருக்கின்றது.

நிலாரசிகன்
nilaraseegan@gmail.com

## கணினி கலைச்சொற்கள்

கணினி சம்பந்தமாக ஏராளமான ஆங்கில சொற்களை நாம் தினம் தினம் பயன்படுத்துகின்றோம். எப்படி தொலைக்காட்சி என்பது ஒரு காலத்தில் எல்லோர் வீட்டிலும் தவிர்க்க முடியாத அங்கமாக மாறியதோ அதே போல கணினியும் மாறிக்கொண்டு வருகின்றது. மாதா மாதம் சில கலைச்சொற்களை புதிகாக கற்போம்.

1) Soft Copy - மென்படி
2) Chips - சில்லுகள்
3) Files - கோப்புகள்
4) Microprocessor - நுண்செயலி
5) Template - படிம அச்சு
6) Loop - கண்ணி
7) Data – தரவு
8) Monitor - திரையகம்
9) Software Program – செயலி
10)Keyboard - விசைபலகை

தொகுப்பு - விழியன்
vizhiyan@gmail.com

## மழையில் நனையும் இரவு

வகுப்பறை முழுவதுமாய்
சாரலில் தேங்கிய தண்ணீரில்
மிதந்திருந்தன
மறந்து வைத்துப் போன புத்தகங்கள்!.
மகிழ்ச்சியில் சிதைத்த அவைகளின்
குளிரை மெல்ல தன் நடுங்கும் விரல்களால்
வருடுகிறாள்
ஆசிரியருக்கு பயந்த சிறுமி !

க. அம்சப்பிரியா

## சென்னை இணைய நண்பர்கள் சந்திப்பு - ஒரு பார்வை

ஆங்கிலத்தின் ஆதிக்கத்தில் கோலோச்சிய இணையத் தளம் இப்போது வெவ்வேறு மொழிகளின் குறு நில சாம்ராஜ்யங்களாகிக் கொண்டு வருகிறதை ஒப்புக் கொண்டேயாக வேண்டும் அதுவும் இன்றைய இணையத் தளத்தின் புதிய தொழில் நுட்பங்களுக்கும், அணுகு முறைகளுக்கும் பொருந்தி வர தமிழை கணினிக்கு ஏற்றவாறு தமிழுருக்களின் கண்டுபிடிப்புகளோடு புகுத்தி திருப்தியுறும் வகையில் நம் தாய் மொழி நடை போடத் தொடங்கியுள்ளது என்றால் மிகையாகாது. கணினியும், இணையமும் பணம் காய்ச்சும் ஊடகமாக மட்டுமல்லாமல் இப்போது இலக்கிய ஊடகமாகவும் செயல்பட்டு வருகிறது தமிழ் இலக்கியங்கள் உட்பட...

இணையத் தளங்களில் தமிழின் வளர்ச்சிக்கு மிக முக்கிய பங்கு வகிக்கின்றன கூகுள் இணையக்குழுமங்கள். முழுவதும் தமிழிலேயே மடலாடவும் உரையாடவும் முடிவது இதன் சிறப்பு. இந்த கூகிளின் இணையக் குழுமங்களில் பெரும்பாலான தமிழ் குழுமங்கள் உபயோகமான முறையில் தமிழ் ஆர்வலர்களையும், ஆர்வமுள்ளவர்களையும் இணைத்து இலக்கியம், அரசியல், ஆன்மீகம், கொள்கைகள் போன்ற பலதரப்பட்ட பரிமாணங்களில் தகவல்களும், கருத்துகளும் பரிமாறவும், பகிரவும் , வளர்ந்து வரும் படைப்பாளிகளின் எழுத்துத் திறமையை புடம் போட்டு, பட்டை தீட்டவும் தகுந்த களமாக விளங்கி வருவது பெருமைப்பட வேண்டிய ஒன்று.

இத்தகைய குழுமங்களில் முத்தமிழ், தமிழ் பிரவாகம், பண்புடன், நம்பிக்கை, தமிழுலகம் என்று ஐந்து வகையான குழுமங்கள் ஒன்று சேர்ந்து கடந்த ஜூலை 20ம் திகதி அன்று சென்னையில் குழும நண்பர்களின் சந்திப்பை விழாவாக நடத்தின. இவ் விழா சந்திப்பில் பல ஆக்கப்பூர்வமான விசயங்கள் கலந்துரையாடப்பட்டன.

சுமார் எழுபத்தைந்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட இந்த சந்திப்பில் விழா தலைவராக பிரபல கிரிக்கெட் வர்ணணையாளரும், வானொலி அறிவிப்பாளரும், முத்தமிழ் குழுமத்தின் மூத்த உறுப்பினருமான மரியாதைக்குரிய திருவாளர். அப்துல் ஜப்பார் அவர்கள் பொறுப்பேற்றார்கள். சிறப்பு விருந்தினராக இணையத்தில் பிரபலமான சிபி

இணையதள ஆசிரியரும் கவிஞருமான மதிப்புக்குரிய திருவாளர் அண்ணா கண்ணன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்..

இவ் விழாவின் நிகழ்சிகளில் முக்கிய நிகழ்வுகளாக குறிப்பிடக் கூடியவை:

1) நான்கு கணிப்பொறி மென்பொருளாளர்களை ஆசிரியர்களாக கொண்டு வெளி வரும் “மென் தமிழ்” இணைய இதழின் முதல் இதழ் வெளியீடு நடைபெற்றது.

2) தமிழ் பிரவாகம் மடலாடற் குழுவின் ஆண்டுமலர் வெளியீடும் , அக் குழுமம் இணைய அளவில் நடத்திய இலக்கியப் போட்டி - 2008ல் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பும் இடம்பெற்றது.

3) கவிஞர் நிலாரசிகனின் “ஒரு பட்டாம்பூச்சியின் கனவுகள்” கவிதைநூல் வெளியீடு

4) துபாய் பற்றி ரசிகவ் ஞானியார் எழுதிய நூல் வெளியீடு

5) முத்தமிழ் குழுமத்தின் ஆண்டுமலர் மின் தகடு வெளியீடு ஆகியவை நடைபெற்றது.

முகம் தெரியாமல் இணையத்தில் இதயங்களால் நட்புக்கு கரம் கொடுத்த குழும உறுப்பினர்கள் பலர் ஒன்று கூடி விழாவாக நடத்தியது அதுவும் வெவ்வேறு குழுமங்கள் ஒன்றாக இணைந்து இந்த நிகழ்வில் சங்கமித்ததும் தமிழ் குழும வரலாற்றில் முக்கியமான பதிவு என்று தான் சொல்ல வேண்டும். வெவ்வேறு முரணான கருத்துகளும், கொள்கைகளும் கொண்ட பதிவர்கள் அதுவும் வெவ்வேறு குழும பதிவர்கள் ஒன்றாக இணைந்து விழா நடத்தியதும், பல பயனுள்ள விசயங்கள் பரிமாறப்பட்டதும் தமிழின் இன்னொரு மைல் கல்லாக எடுத்துக் கொள்ளலாம். கல் தோன்றா காலத்துக்கும் முன் தோன்றிய மூத்த மொழியாம் தமிழ் மொழி இன்று இணைய உலகிலும் தன் ஆளுமையை நிலை நிறுத்துகிறது.

சுவாதி, கனடா

mswathi1025 @gmail.com

## உலகின் முதல் இணைய தளம் - கட்டுரை

வலையுலக பிதாமகன் என அழைக்கப்படும் டிம் பெர்னர்ஸ் லீ (Tim Berners Lee) 1990 ஆம் ஆண்டு ஊநுசுேே இல் (ஐரோப்பிய அணுசக்தி ஆய்வு கழகத்தில்) ஆய்வு செய்து கொண்டிருந்த போது Hypertext எனும் தொடர்ச்சியாக எழுத்து வடிவங்களை இணைக்கும் கருதுகோள் மூலம் சிறு கணினியையும் இணையத்தையும் இணைத்து உலகின் முதல் இணைய தளத்தை உருவாக்கினார்.

முதலில் CERN க்காக ஆய்வாளர்கள் தங்கள் கண்டுபிடிப்புகள், தகவல்களை பகிர்ந்து கொள்வதற்காக இந்த இணைய தளம் மற்றும் இணைய பக்கங்கள் உபயோகிக்கப்பட்டன.பின்னர் 1992 ஆம் ஆண்டு உலகின் மற்ற ஆய்வு கழகங்களில் கணினி வழங்கிகள் வந்த பிறகு இணையம் உலகில் பரவ ஆரம்பித்தது.

World's First Web site

1990 இல் டிம் பெர்னர்ஸ் பின்னிய அந்த இணைய தளத்தின் உண்மையான பக்கம் தற்போது இல்லை எனினும் 1992இல் டிம் பெர்னர் அந்த தளத்தின் ஒரு பக்கத்தின் நகல் எடுத்து World wide web Consortium தளத்தில் வைத்துள்ளார்.

Web page of World's first Web site

தற்போது எளிமையாக தெரியும் அந்த இணைய பக்கத்தில் ஆரம்பித்து இன்று உலகத்தையே புரட்டி போட்டு விட்டது உலகளாவிய இணைய வலை.இணைய வலையை கண்டுபிடித்ததற்காக பல்வேறு விருதுகள் பெற்ற டிம் பெர்னர்ஸ் உலகின் வாழும் அறிவுஜீவிகளின் பட்டியலில் முதல் இடம் பிடித்து 2004 ஆம் ஆண்டு இங்கிலாந்திடமிருந்து knight பட்டம் பெற்றார்.

முன்னொரு காலத்தில் தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக Global village பின் Global Hut என்ற பின்னர் Global Desktop என்றாகி தற்போது Global Palm(??!!) என செல் பேசிகளிலும் இணைய பக்கங்கள் உள்நுழைந்து உலகமே உள்ளங்கைக்குள் சுருங்கி விட்டது.சென்ற ஜூன் மாத கணக்குப்படி உலகின் மொத்த இணைய தளங்களின் எண்ணிக்கை 17, 23, 38, 726. சென்ற ஒரு மாதத்தில் மட்டும் 40 லட்சம் இணைய

தளங்கள் தொடங்கப்பட்டுள்ளன. டிம் பெர்னர்ஸ் இன்று நிகழ்ந்து கொண்டிருக்கும் இணைய தொழில் நுட்பங்களையும் வளர்ச்சியையும் பார்த்து தினம் தினம் ஆச்சர்யப்பட்டு கொண்டிருப்பார்.

பிரேம்ஜி
http://premkg.blogspot.com

## வாழ்க்கைப் பாடம்

எல்லாப்பூக்களையும் பறித்தபின்னும்
எப்போதும்போல இயல்புடன் இருக்கும் செடி

அத்தனை இலைகளும் உதிர்ந்தபின்னும்
அப்படியே நிமிர்ந்து நிற்கும் மரம்

இடியையும் மின்னலையும் தாங்கி
மழைபொழிந்தபின்னும்
கலங்காத தெளிந்த வானம்

மண்ணில் விழுந்ததும்
துள்ளி எழுந்து நிற்கும் கன்று

கொஞ்சம்கொஞ்சமாய் தேய்ந்துபோனாலும்
முழுமையாய் ஒருநாள் முகம்காட்டும் பௌர்ணமிநிலவு...

எல்லாமே வாழ்க்கைப்பாடம் நடத்துகின்றன
எதிலும் நம்பிக்கை இழந்த மனிதர்களுக்கு.

ஷைலஜா
shylaja01@gmail.com

## கி. ராஜநாரயணன் தொகுத்த கு.அழகிரிசாமி சிறுகதைகள்

சென்ற தலைமுறையின் குறிப்பிடத்தக்க எழுத்தாளரான கு.அழகிரிசாமி எழுதி சிறந்த கதை சொல்லி கி. ராஜநாரயணன் தொகுத்த இப்புத்தகத்தில் நாற்பதுக்கும் மேற்பட்ட கதைகள் உள்ளன. எளிய நடையில் மனித மனங்களை வெளிச்சமிட்டு காட்டும் இதில் ஒரு சில கதைகள் படித்து பல மாதங்கள் ஆகியும் மனதை விட்டு அகல மறுக்கின்றன, நேசமான பெண்ணின் ஆறுதல் வார்த்தைகளைப்போல.

காதலியின் எல்லா உடைகளும் பிடித்திருந்தாலும் அதில் சில எப்பொழுதும் நம் கண்முன் நிற்கும் அல்லவா? அதுபோல இதில் எனக்கு மிகவும் பிடித்த ஐந்து கதைகளை குறிப்பிடுகிறேன். இரண்டு பெண்கள் என்னும் கதை ஒரு வாலிபன் அழகில்லாத பெண்ணுடன் பழகும்போது கண்டுகொள்ளாத சமூகம் ஒரு அழகு பெண்ணுடன் பழகும்போது கொதிப்பதை பற்றியது.

மகன்களுடன் ஒத்து வராமல் தன் மகன் வயதையொத்த ஒருவருடன் அன்யோன்யமாக இருப்பவர் பொருள் என்று வரும்போது மகனுக்கே என்று எடுக்கும் நிலைப்பாடு பற்றிய கதையும், வசதியான வீட்டில் இருந்து தற்போது கடன் வாங்கும் நிலையில் இருக்கும் ஒரு பெண்ணின் மனநிலையை சித்தரிக்கும் கதையும் மறக்க இயலாதவை.

அழகான பெண்கள் இருக்கும் வீட்டில் சமையல் வேலைக்கு போகும் ஒரு வாலிபன் அவர்கள் அவனை ஆணாக மதிக்கவில்லை என்று அங்கிருந்து வெளியேறும் கதை நுட்பமாக சித்தரிக்கப்பட்ட ஒன்று. தன் மகளின் காதல் திருமணத்தால் வேறு ஊருக்கு சென்று அங்கு நல்லவர்களாக வாழும் ஒரு குடும்பத்தின் கதை இன்றைய மக்களை பிரதிபலிக்கும் படைப்பு. இவரின் கதைகளை படிக்கும் போது, தேர்வு முடிவுகள் வெளியான நாளுக்கும் பள்ளி துவங்கும் நாளுக்கும் இடைப்பட்ட நேரத்தில் நமக்கு பிடித்த விஷயங்களை பயமில்லா மனநிலையில் செய்து மகிழ்வோமே அந்த உணர்வு கிடைக்கிறது.

நன்றி

http://bookimpact.blogspot.com

## யூ-ட்யூப் வீடியோவை இணையிறக்கம் செய்வது எப்படி?

யூட்யூப், மெட்டாக.ஃ.பே, கூகிள் வீடியோஸ் போன்ற தளங்களில் இருந்து வீடியோக்களை இணையிறக்கம் செய்து மீண்டும் மீண்டும் பார்த்து மகிழ்வதற்கு எத்தனையோ மென்பொருள்கள் இணையத்தில் இருக்கின்றன.

ஆனால் அவற்றை இன்ஸ்டால் செய்வதற்கு மனதளவில் தயக்கம் இருக்கிறவர்களுக்கான மாற்று முறையை இங்கே கொடுக்கிறேன்.

வீடியோவையும் இறக்கிக்கொள்ளவேண்டும். எந்தவிதமான மென்பொருளையும் இன்ஸ்டால் செய்யக்கூடாது.

அதற்கான வழிமுறை இதோ.

Keepvid

VideoDownloadx (formerly known as YoutubeX)

VDownloader

Boom Video

Zilla Tube

TubeG

மேற்கண்ட தளங்களில் ஏதோ ஒன்றில், மூல வீடியோவின் யு.ஆர்.எல் ஐ கொடுக்கவும். பின் எந்த வடிவில் எந்த விதமான வீடியோவாக உங்களுக்கு வேண்டும் என்று உள்ளிடவும்.

அவ்வளவுதான். உங்களது கணினியில் உங்களுக்குத் தேவையான வீடியோ கிடைத்துவிடும்.

தமிழ்நெஞ்சம்

**tamilnenjam@gmail.com**

## மக்கள் எழுச்சியும் மலரும் நினைவுகளும், தமிழ்மொழி மீட்டுருவாக்கம், கல்விமுறை களவுபோகும் உரிமை

**சிறப்புக்கருத்தரங்கம் - நிகழ்வுத் தொகுப்புரை.**

த.ச.பேரவையின் ஐந்தாவது சிறப்புக்கருத்தரங்கம் கல்வி போராளி காமராசர் அரங்கில் த.ச.பேரவையின் பொருளாளர் நாஞ்சில் சுரேசு வரவேற்புரையோடு துவங்கிற்று. த.ச.பேரவையின் பொதுச்செயலாளர் இரா.க.சரவணன் தலைமையேற்க, பேரவையின் அமைப்புக்குழு உறுப்பினரும் து.செயலாளருமாகிய அன்வர் அலி முன்னிலை வகித்தார்.

நிகழ்வின் தொடக்கமாக தோழர் நிலவனும் தொழர் பட்டுக்கோட்டை சத்யாவும் தமிழ்தாய் வாழ்துப்பாடினர். அதைத் தொடர்ந்து முதல் அமர்வான மக்கள் எழுச்சியும் மலரும் நினைவுகளும் துவக்கமாக தோழர் செந்தில் குமார் “இணைந்தோம் உலகத் தமிழராய் இணைந்தோம்” என்ற உலகத் தமிழர் பண் பாடினார்.

த.ச.பேரவையின் து.தலைவர் வயி.பி.மதியழகன் மக்கள் எழுச்சியும் மலரும் நினைவுகளும் என்ற தலைப்பில் எழுச்சிமிக்க உரையைத் தொடர்ந்து த.ச.பேரவையின் து.செயலாளர் நிலவன் உலகபோராளி நெல்சன் மண்டேலா என்ற தலைப்பில் எழுச்சிமிக்க கவிதை படித்தார்.

இதையடுத்து த.ச.பேரவையின் செயற்குழு உறுப்பினர் தோழர். கி. திருமுருகன் “தில்லைச் சமரில் வென்றது தமிழ்” என்ற கையேட்டினை வெளியிட தாய்மண் கலை இலக்கியப் பேரவையின் தோழர். அழ.பாண்டிச்செல்வம் பெற்றுக் கொண்டார்கள். முதல் அமர்வின் தீர்மானங்களை தோழர். மணிவாசகம் அவர்கள் படிக்க அரங்கத்தின் பலத்த கரவொலியோடு நிறைவேற்ற பட்டது. முதல் அமைவை நிறைவு செய்யும் விதமாகவும் இரண்டாம் அமர்வை தொடங்கும் விதமாகவும் தோழர் செந்தில் குமார் எழுச்சி மிக்க பாடலை பாடினார்கள்.

அதை தொடர்ந்து தோழர் பட்டுக்கோட்டை சத்யா அவர்கள் தமிழ் மொழி மீட்டுருவாக்கம் என்ற தலைப்பில் சீரிய உரையாற்றினார்கள். தமது உரையின் போது தமிழ் மொழி

சிறக்கவும், தமிழை மீட்டுருவாக்கம் செய்யவும் மறைமலையடிகள், செய்குத்தம்பி பாவலர், சோமசுந்தர பாரதியார் ஆகியோர் ஆற்றிய தொண்டினையும் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினையும் எடுத்துக் கூறினார்கள்.

தோழர் செந்தில்குமாரின் எழுச்சி மிக பாடலைத் தொடர்ந்து கருத்தரங்க வெளியீடாக தமிழறிஞர்களின் வாழ்க்கை வரலாற்றுத் தொகுப்பை த.ச.பேரவையின் செயற்குழு உறுப்பினர் தோழர். அப்துல் கனி வெளியிட இந்திய யூனியன் முசுலிம் லீக்கின் அமைப்பாளர் மருத்துவர் அன்வர் பாசா அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

அடுத்துப் பேச வந்த த.ச.பேரவையின் தலைவர் தோழர் தமிழ்நாடன் அவர்கள் “கல்வி முறையும் களவு போகும் உரிமையும்” என்ற தலைப்பில் இன்றைய கல்வி முறையின் சீர்கேட்டினையும், அதனை மாற்றி அமைக்க வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக் கூறியதோடு தமிழ் வழிக் கல்வியின் அவசியத்தையும் விளக்கிக் கூறினார்கள்.

இக்கருத்தரங்கத்தின் சிறப்புரை நிகழ்த்திய இந்திய யூனியன் முசுலிம் லீக்கின் அமைப்பாளர் தோழர். அன்வர் பாசா அவர்கள், காமராசர் அவர்கள் தமிழகத்திற்கும் தமிழர்களின் கல்விக்கும் ஆற்றிய தொண்டினையும் சிறப்பாக எடுத்துக் கூறினார்கள்.

இதையடுத்து தோழர் வித்யாசாகர் அவர்கள் பழங்குடி மக்களின் வாழ்வையும் வேதனைகளையும் தனது கவிதையின் மூலம் வெளிப்படுத்தினார்கள்.

இரண்டாம் அமர்வின் தீர்மானங்களை தோழர். நிலவன் படிக்க அரங்கத்தினர் கரவொலி எழுப்பி நிறைவேற்றினர்.

இரண்டாம் அமர்வின் நிறைவாக தோழர் செந்தில்குமார் அவர்கள் எழுச்சிமிகு பாடலை பாடினார்கள். நிறைவாக தோழர். இரா.க.சரவணன் கருத்தரங்கத்தின் பொதுத்தீர்மானங்களை நிறைவேற்றி, கறுப்பு சூலை, அணுசக்தி உடன்பாடு உள்ளிட்ட பல அரசியல் நிகழ்வுகளை குறித்து சிறப்புற விளக்கி தலைமையுரையாற்றினார்கள்.

நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களுக்கு சிற்றுண்டியும் கருத்தரங்க வெளியீடுகளும் வழங்கப்பட்டது.

தோழர் அன்வர் அலியின் நன்றியுரையோடு நிகழ்ச்சிகள் இனிதே நிறைவுற்றது.

**முதல் அமர்வு: மக்கள் எழுச்சியும் மலரும் நினைவுகளும்**

1) ஆங்கிலேய அரசை அவர்களிருந்த கோட்டைக்குள்ளேயே எதிர்த்து புரட்சி விதையை விடுதலை உணர்வை முதன் முதலாக விதைத்த “வேலூர் புரட்சியை” தமிழகத்தில் நடைபெற்ற பிற விடுதலைப் போரை போன்றே வரலாற்றில் இரட்டடிப்பு செய்யப்படுள்ளதை மாற்றி முறையான வரலாற்றுப் பதிவை செய்திட ஆவண செய்யுமாறு மைய மாநில அரசினை கேட்டுக்கொள்கிறோம்.

2) நாம் வாழும் காலத்தில் நம் கண் முன்னே உலகத்தினருக்கெல்லாம் சிறந்த எடுத்துக்காட்டாய் வாழ்ந்து கொண்டிருக்கும் மாபெரும் புரட்சியாளர் “உலக சமூகநீதி காவலர்” நெல்சன் மண்டேலா அவர்களின் 90 ஆவது பிறந்தநாள் விழாவில் அவரை பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தி இத்தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

**இரண்டாம் அமர்வு: கல்வி முறையும் களவு போகும் உரிமையும், தமிழ் மொழி மீட்டுருவாக்கம்**

1) எம்.ஜி.ஆர் பல்கலைக் கழகம் இவ்வாண்டு முதல் அறிமுகப்படுத்தும் தமிழ் வழி மருத்துவப் பாட திட்டங்களையும், தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தின் முயற்சியில் செயலுக்குவரும் தமிழ் வழி பொறியியல் பாடத்திட்டத்தினையும் ஆதரித்து முதல் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

2) தனியார் கல்லூரிகளை பல்கலைக்கழக தகுதியை தந்து கல்வியை வியாபார தொழிலாக்குவதை கண்டித்தும், அரசே மாவட்டத்தோறும் பல்கலைக்கழகங்களை உருவாக்கிட வலியுறுத்தியும் இத்தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

3) காமராசரின் பிறந்தநாளைக் கொண்டாடும் இவ்வேளையில் அவர் கொண்டு வந்த

சென்னை ஐ.ஐ.டி எனப்படும் இந்திய தொழில்நுட்ப கழகத்தில் அவர் கண்ட கனவை நிறைவேற்றிடும் வகையில் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் இடஒதுக்கீட்டு முறையை நடைமுறைப்படுத்த வேண்டியும் மைய, மாநில அரசை வலியுறுத்தி இத்தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

**பொதுத் தீர்மானங்கள்:**

1) தமிழக மீனவர்களை இலங்கை அரசு கண்மூடித்தனமாக துப்பாக்கிச்சூடு நடத்துவதையும், கொலை செய்வதையும் கண்டிப்பதோடு, தமிழக அரசும், நடுவண் அரசும் தக்க நடவடிக்கை எடுத்து தமிழக மீனவர்களை காத்திட வலியுறுத்தி இத்தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

2) அரசு மீதான நம்பிக்கையில்லா தீர்மானத்தின் போது நடைபெற்ற கீழ்த்தரமான அரசியல் செயல்பாடுகளை கண்டிப்பதோடு, அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பான உண்மை நிலையினை மக்கள் முன் விளக்கி நாடாளுமன்றத்தில் விரிவான விவாதத்தையும் ஓட்டெடுப்பும் நடத்திய பிறகே மேல்நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் இத்தீர்மானம் கேட்டுக்கொள்கிறது.

3) பெரியாரியல் அறிஞர் வே.ஆனைமுத்து அவர்களின் முயற்சியால் தரமான இலவச பொதுக்கல்வியையும் தொழிற்கல்வியையும் வழங்கவும் நூலகம் ஆய்வகம் உள்ளிட்ட பிற வசதிகளை ஏற்படுத்தவும் தொடங்கப்பட்ட “பெரியார் ஈ.வே.இராமசாமி - நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளை”யை வாழ்த்துவதோடு அதன் வளர்ச்சியில் பங்குபெறும் விதமாக அறக்கட்டளை வளர்ச்சி நிதியை பொதுமக்களிடமிருந்து திரட்டி தருவதாகவும் முடிவு செய்து இத்தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

தமிழ்நாடன்
thamizhnadan@googlemail.com

## XP - ஹைபர்நேட்

ஹைபர்நேட் என்றால் என்ன?

அது எவ்வாறு உபயோகப் படுகிறது?

விண்டோஸில் “ஹைபர்நேட்” என்பது கணினியை மூடும் வழிகளில் ஒன்றாகும்.

கணினியை சாதாரணமாக ஷட் டவுன் செய்யும் பொழுது அனைத்து புரோக்கிராம்களையும் மூடிவிட்டு ஷட் டவுன் செய்கிறோம். அவ்வாறு நாம் மூடாவிட்டாலும் விண்டோஸ் தானாகவே அனைத்து புரோக்கிராம்களையும் மூடிவிட்ட பின்னரே ஷட் டவுன் ஆகிறது.

கணினியில் நாம் ஆரம்பித்த பணியை முழுமையாக முடித்து விட்டு பின் ஷட் டவுன் செய்வதாக இருந்தால் இது பரவாயில்லை. நம் பணியில் ஒரு பகுதியை மட்டுமே முடித்து விட்டு, மீதியை நாளை தொடரலாம் என்று இருந்தால் அடுத்த முறை கணினியை ஆன் செய்தவுடன் நம் பணியை தொடர மீண்டுமாக நமக்கு தேவையான புரோக்கிராம்களை இயக்கி, நம் கோப்புகளை திறந்து நாம் விட்ட இடத்தை கண்டுபிடிக்க வேண்டும். அதன் பின்னரே நம் பணியை மீண்டும் தொடர வேண்டும், அல்லவா?

கணினியை சாதாரணமாக ஷட் டவுன் செய்யாமல் “ஹைபர்நேட்” செய்தால், நாம் உபயோகப் படுத்திக் கொண்டிருந்த புரோக்கிராம்களை மூடத் தேவையில்லை. நாம் உபயோகப்படுத்திக் கொண்டிருந்த புரோகிராம்கள் மற்றும் கோப்புகளின் நிலையையும் விண்டோஸ் அப்படியே சேமித்து வைத்து விட்டு பின் கணினியை மூடும்.

நாம் அடுத்த முறை கணினியை ஆன் செய்யும் பொழுது கடைசியாக நாம் உபயோகப்படுத்திக் கொண்டிருந்த புரோக்கிராம்களும் கோப்புகளும் நாம் கடைசியாக விட்ட நிலையில் அப்படியே இருக்கும். நாம் நம் பணியை அப்படியே தொடரலாம். இதுவே ஹைபர்நேட் செய்வதில் உள்ள வசதி ஆகும்.

**XP - ஹைபர்நேட் செய்வது எப்படி?**

விண்டோஸ் கணினியை ஹைபர்நேட் செய்யும் வசதி எளிதில் கண்களுக்கு புலப்படுமாறு அமையப் பெற்றிருக்கவில்லை. இருந்தாலும் ஒன்றினுக்கு மேற்பட்ட வழிகளில் கணினியை ஹைபர்நேட் செய்யலாம். இலகுவான வழி ஒன்றினை இங்கு காண்போம்.

“ஹைபர்நேட்” செய்யும் வழி:

சாதாரணமாக நாம் ஸ்டார்ட் மெனுவில் உள்ள “டர்ன் ஆ∴. கம்பியூட்டர்” எனும் தெரிவை கிளிக்கினால் கீழே இருப்பது போல் ஒரு டயலாக் பெட்டி தெரியும்.




இப்பொழுது ஷிப்டு கீ - யை அழுத்தவும். உடனே “ஸ்டான்டு பை” எனும் தெரிவிற்கு பதிலாக “ஹைபர்நேட்” எனும் தெரிவு தெரியும்.




இப்பொழுது “ஹைபர்நேட்” எனும் தெரிவை கிளிக்கினால் போதும், கணினி ஹைபர்நேட் ஆகும்!


அமிர்தராஜ்

http://kaniththuli.wordpress.com

## பிஞ்சுக் கரங்களில் தாய்மை....

தாய்மை எந்த ரூபத்திலும் எந்த வயதிலும் வரலாம் என்பதற்கு இதோ கீழே இருக்கும் ஒரு கலந்துறையாடலே சான்று. தன்னலம் அற்ற தூய மனதுடன், எந்த வித எதிர்பார்ப்பும் இல்லாமல், தன் பணியை மனதார முழு ஆப்பணிப்போடு செய்யும் ஒரு குழந்தை வடிவத்தில் தெய்வம்.

கொஞ்சம் பெரிய பதிவு...சிரமம் பார்க்காமல் தயவு செய்து முழுவதும் படிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

எச்ஐவியால் பாதிக்கப்பட்ட ஒரு தாய் மரணப்படுக்கையில்.. அவரைப் பார்த்துக் கொள்வது அவருடைய பத்து வயது மகள்.

சம்பந்தப் பட்ட குழந்தையின் நலன் கருதி, பெயரோ, அடையாளமோ கொடுக்கப்படவில்லை.

**எத்தன நாளா அம்மா இப்படி இருக்காங்க?**

ஒரு வருஷமா அம்மாக்கு உடம்பு சரியில்லை. அவங்க ஒரு ஹோட்டல்ல வேலை செய்துட்டு இருந்தாங்க. அங்க யாருடனோ ஏற்பட்ட தொடர்பால் தங்கச்சி பாப்பா பிறந்தா. அப்ப இருந்து அம்மாக்கு உடம்பு சரியில்லை. அம்மாக்கு எய்ட்ஸ் வியாதின்னு சொன்னாங்க. அம்மா ரொம்ப நாளா எங்க கிட்ட சொல்லலை... லேட்டா தான் வெளியே சொன்னாங்க. முதல்ல எல்லாம் ரொம்ப அழுவேன். இப்ப எனக்கு தைரியம் வந்துடுச்சு. சொந்தக்காரர் ஒருத்தர் தைரியமா இருக்க சொன்னதுனால அம்மாவ நல்லா பார்த்துக்குறேன்.

**அம்மாக்கு என்ன எல்லாம் நீ செய்வே.. எப்படி பார்த்துப்பே?**

அம்மா உடம்ப தொடச்சி விடனும். வாயில் நீர் வழிஞ்சுட்டே இருக்கும். அதை தொடர்ந்து தொடைக்கனும். துணி மாத்தி விடனும். தினமும் படுக்கை மாற்றனும். பவுடர் போடனும். அவங்க டாய்லெட் போனா கழுவி விடனும்.

**உனக்கு இது எல்லாம் செய்ய கஷ்டமா இல்லையா?**

(நம் கண்களுக்குள் ஊடுருவிப் பார்த்துட்டு) என் அம்மாதானே, நான் தானே செய்யனும்... அம்மாவ மட்டும் இல்லை.... தங்கச்சி பாப்பாவையும் நான் தான் பார்த்துப்பேன். அவ ரொம்ப குறும்பு (சிரித்துக் கொண்டே).. சில சமயம் அம்மாவ கவனிச்சுட்டு இருக்கும் போது அவளை கவனிக்கலைன்னு அழுவா... கோவம் வந்துடும் அவளுக்கு.. (ஹா ஹா என்று சிரிப்பு)

**அப்பா?**

அவர் எங்களை விட்டுட்டு போய் வேற கல்யாணம் பண்ணிக்கிட்டார்

**அம்மா இப்படி பண்ணிட்டாங்களேன்னு உனக்கு கோவம் வந்திருக்கா?**

இல்லை... ஆனா ரொம்ப வருத்தமா இருக்கு... அம்மாவ முழுவதும் குணப்படுத்த முடியலைன்னு.. எத்தன நாளைக்கு அம்மா இப்படியே இருப்பாங்கன்னு தெரியலையே..ஆனா அம்மா தான் எனக்கு விஷம் குடு விஷம் குடுன்னு கேட்டுட்டே இருப்பாங்க....நான் எப்படி குடுப்பேன்..நான் அம்மாவ நல்லா பார்த்துப்பேன். (பேசிக்கொண்டு இருக்கும் போதே தங்கச்சிப்பாப்பா துறு துறு என்று இவள் பக்கம் தவழ்ந்து வர..அவளை அள்ளிக் கொள்கிறாள்..)

**குட்டிப்பாப்பாவ தூக்கனும், பார்த்துக்கனும், அதுனால உனக்கு களைப்பா இல்லையா?**

(சிரித்துக்கொண்டே வெகுளியாக) கைவலிச்சா அவள அடுத்த கைக்கு மாத்திக்குவேன்.. ஆனா அவ ரொம்ப சேட்டை..பாருங்க என் முடிய பிடிச்சு இழுக்கறா. என் கன்னத்தை கிள்ளி வச்சுட்டே இருப்பா..நேத்து என்னை பளார்னு அறஞ்சுட்டா.. ஆனா குட்டிப்பாப்பாதானே அவளுக்கு தெரியாதில்ல.. ரொம்ப குறும்பு பண்ணா, “பேசாம இரு..இல்லன்னா பேச மாட்டேன்னு சொல்லுவேனா..அப்புறம் சிரிப்பா... பேசாம இருப்பா”. (குழந்தைக்கு முத்தம் கொடுத்துக் கொண்டே)

**பாப்பாவ கீழ போட்டற மாட்டியே...?... நல்லா பிடிச்சுக்கோ**

அதெல்லாம் போடமாட்டேன்... கெட்டியா பிடிச்சுப்பேன்... இப்படி (கெட்டியாக நெஞ்சோடு அணைத்துக் கொள்கிறாள்).

(குட்டிப்பாப்பா இந்த பத்து வயது சிறுமியை அம்மா என்று தான் அழைக்கிறாள்).

**குட்டிப்பாப்பா உன்னை அம்மான்னு கூப்பிடறாளே?.. உங்க வீட்ல உங்க அம்மா, பாட்டி எல்லாம் இருக்காங்க... அவங்களையும் அம்மான்னு தான் கூப்பிடுவாளா?**

இல்லை... என்னை மட்டும் தான் அம்மான்னு கூப்பிடிவா... ஏன்னு தெரியலை.. ஆனா அவ அப்படி கூப்பிடும் போது எனக்கு நல்லா இருக்கும்... என்னை மட்டும் தான் அப்படி கூப்பிடுவா என் குட்டி (என்று மீண்டும் பாப்பாவுக்கு முத்தம் கொடுக்கிறாள்)

**நீ ஸ்கூலுக்கு போறதில்லையா?**

நான் ஸ்கூலுக்கு போனா அம்மாவையும், குட்டிப் பாப்பாவையும் யாரு பார்த்துப்பா?

**தங்கச்சி பாப்பாவ யாராவது எடுத்து வளர்க்க முன் வந்தா நீ சரி சொல்லுவியா?**

அவ நல்லா படிக்கனும்.. எனக்கு அவள நல்லா பார்த்துக்கனும்னு ஆசை.. ஆனா நான் என்ன வேலை பார்க்குறதுன்னு தெரியலை... அவ வசதியான இடத்துக்கு போனா சந்தோஷம் தான்.. ஆனா நான் எப்படி அவள விட்டுட்டு இருப்பேன்...

(மிகுந்த சோகத்துடன்)

**உனக்கு எய்ட்ஸ் பத்தி என்ன தெரியும்?**

(கைகள் இரண்டையும் இருக்கமாக கட்டிக் கொண்டு) ஐயோ யாருக்கும் அது வரக்கூடாது.

**எய்ட்ஸ் எப்படி வருதுன்னு உனக்கு தெரியுமா?**

ஆணுறை உபயோகிச்சா வராதாம்.

**உனக்கு யாரு சொன்னா ?**

ஒரு விளம்பரத்துல படிச்சேன்.. எச்ஐவி ல் இருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ள ஆணுறை உபயோகிங்கள் என்று.

(ம்ம்ம்.. என்ன சொல்ல)

**அம்மா மாதிரி எச்ஐவியால பாதிக்கப்பட்டவங்க கிட்ட நீ என்ன சொல்லுவே?**

அம்மா மாதிரி லேட்டா சொன்னா, என் மாதிரி குழந்தைங்க என்ன பண்ணுவாங்க...அதுனால தெரிஞ்ச உடனே டாக்டர் கிட்ட போனா கஷ்டப்பட வேண்டியது இல்லை...லேட்டா சொல்லி அவங்களுக்கு ஏதாவது ஆச்சுன்னா நம்மளால தாங்க முடியுமா?... வீட்ல இருக்குறவுங்களும் அவங்கள நல்லா பார்த்துக்கனும் (இதை விட ஒரு சிறந்த விழிப்புணர்வு செய்தி இருக்க முடியுமா… ம்ம்ம்)

**நீ ஏதாவது கேட்க விரும்பறியா?**

அம்மாக்கு ஏதாவது ஆச்சுன்னா நான் எங்க இருப்பேன்?... என்ன பண்ண? (மனதை பிழியவில்லை?..ம்ம்ம்)

**நீ எங்க போக விரும்பறே?**

தெரியலை.... என்ன என்னமோ சொல்றாங்க... தனியா இருந்தா யாராவது தப்பா நடந்துப்பாங்களாம்... கடத்திட்டுப் போய் வித்துடுவாங்களாம்... ரேப் பண்ணிடுவாங்களாம். (கடவுளே!!!)

**நீ சாமிய பார்த்தா என்ன கேட்பே?**

எல்லாரும் எந்த நோயும் இல்லாம ஆரோக்கியமா இருக்கனும்.

**உனக்காக ஒன்னும் கேட்க மாட்டியா?**

கண்டிப்பா கேட்பேன்… என் அம்மாக்கு சீக்கிறம் நல்லாகனும்… குட்டிப்பாப்பா நல்லா இருக்கனும்... (சுயநலம் இல்லாத இந்த அன்பான மனதை வணங்கத் தோன்றுகிறதல்லவா? ம்ம்)

தற்பொழுது அம்மா மருத்துவமனையில்..

**அம்மாவ பார்க்க போறியா?... நான் கூப்டுட்டு போறேன்..**

அம்மாவ பார்க்கனும் போல இருக்கு.. ஆனா நான் போன அப்புறம் ஏதாவது......................................... (குட்டிப்பாப்பாவை அனைத்துக் கொண்டு அழுகிறாள்.)

இது போல எத்தனையோ குழந்தைகள் படித்து, விளையாடி மகிழ வேண்டிய வயதில் குடும்ப பாரத்தை சுமந்து கொண்டு இருக்கிறார்கள்.

இயலாமையை நினைத்து நினைத்துத் துவண்டு விடுகிறது என் மனம்.

எத்தனையோ திட்டங்கள், கோடி கோடியாய் பணம் எச்ஐவி தடுப்பு பணிகளுக்காக ஒதுக்கப்படுகிறது. இத்திட்டங்களினால் பயன் அடைந்து கொண்டிருப்பவர்கள் ஏராளம். மறுப்பதற்கில்லை. ஆனால் அவர்களின் எண்ணிகையை விட திட்டம் தீட்டுபவர்களுக்கும், அதை செயல் படுத்துவர்களுக்கும் செலவு செய்யும் பணம் அதைவிட அதிகம்.

மறுபடியும் மறுபடியும் மரணத்தைப் பார்க்கும்போது வேதனையின் கடுமை குறைவதைப்போல, சுடுகாட்டில் பிணத்தை எரிப்பவருக்கு எல்லாமே பழகிப் போவதைப் போலத்தான் இந்தச் சிறுமியின் கதையும். அதிகாரிகளுக்கு இது மற்றொரு “கேஸ்”.

இந்தப் பதிவினை எழுதி முடித்த அடுத்த நாள் என் தோழி ஒருத்தி கோவையில் இருந்து தொலைபேசினாள். ஒரே பெண்... நல்ல வசதியான குடும்பம்... அந்த உரையாடலையும் படியுங்கள்.

**நான்** - ரொம்ப நாளா பேச முடியலை .. எப்படி இருக்கே?

**தோழி** - நல்லா இருக்கேன்...நானும் கட்டட வேலைய பார்த்துகறதுனால பேச முடியலை.

**நான்** - ஓ மறுபடியும் வீடு கட்டறியா?

**தோழி** - இல்லை.... அப்பா படுத்த படுக்கை ஆகிட்டார். எல்லாமே பெட்ல தான். வீட்டுக்குள்ள ஸ்மெல் வருது. இன்பெக்‌ஷன் ஆயிட்டா என்ன பண்ண. அதுனால தான் ஒரு அவுட் ஹவுஸ் கட்டினேன். அப்பா அங்க தான் இருக்கார்.

பெரிய வீடு, நான்கு ஆட்களை வேலைக்கு அமர்த்தி தந்தையை பார்த்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு வசதி...அவர் சேர்த்த சொத்துதானே.... இயற்கையாக இருக்க வேண்டிய பாசமும், கடமை உணர்வும் இல்லாமல் எப்படி இருக்க முடிகிறது. எந்த சூழ்நிலை மனிதர்களை இப்படி மாற்றுகிறது? நடைமுறைக்கு ஒத்துவராத உணர்வுகளா இவை..?...என்னால் அப்படி நினைக்க முடியவில்லை.

நாம் செய்யும் செயல்களுக்கு மனதிற்குள்ளேயே நியாயம் கற்பித்து நம்மையே சமாதானம் செய்து கொள்வதை தவிர நாம் வேறு என்ன செய்கிறோம்.

இந்தக் குழந்தை நீடுழி வாழ வாழ்த்தி வணங்குவோம்

மங்கை
http://manggai.blogspot.com/2008/08/blog-post_11.html

## பேசும் மீன்கள்



புத்தகங்களாலும் அழுக்குத் துணிகளாலும்
நிரம்பிக் கிடக்கும்
என் மொட்டைமாடித் தனியறையில்
இப்போது இரண்டு மீன்கள்
கண்ணாடித் தொட்டிக்குள் உலவுகின்றன
நானில்லாத பொழுதுகளில் அவை
சத்தமாய் பேசிக்கொள்வதாய் சொல்கிறார்கள்
இரண்டில் அழகானதிற்கு
உன் பெயர் வைத்திருக்கிறேன்.
ஒரு முறை வந்து பார்த்துவிட்டுப் போயேன்

அய்யனார்
ayyanar.v@gmail.com

## எதிர்வினை - சிறுகதை

ஊரோரம் புளியமரம்

உலுப்பிவிட்டா சலசலங்க

திருநெல்வெலியின் பிரபலமான தாமிரபரணிக் கல்லூரியின் விடுதிக்குள் இருந்துதான் அந்தப் பாடல் ஒலித்துக் கொண்டிருக்க அவர்கள் ஆடிக்கொண்டிருந்தார்கள்.

அறையின் மூலையில் கணக்கில்லா பீடித்துண்டுகள்.
உருண்டோடிய பீர் பாட்டில்
சிதறிக் கிடக்கும் ஊறுகாய் பொட்டலம்..

சுற்றி நின்று ஆடிக்கொண்டிருந்தான் தணிகை தனது சக விடுதி நண்பர்களுடன். நடுவில் குத்துகாலிட்டு அமர்ந்திருந்தான் சேகர். பார்வையில் வெறுப்பா அல்லது கோபமா என்று கண்டுபிடிக்க முடியாத நிலையில் முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான் இவர்கள் ஆடுவதை. பக்கத்து அறை சீனியர் மாணவர்கள் பாடல் சப்தம்கேட்டு எட்டிப்பார்த்து "டேய் அய்யோ பாவம் அவனை ஏண்டா இந்தப் பாடு படுத்துறீங்க..."

"எல ஒன் ஜோலிய பார்த்துட்டு போல... சேகர் வயசுக்கு வந்துட்டா... நீ வரியா குடிசை கட்டறதுக்கு..." என்று தணிகை கிண்டல் செய்ய அவர்கள் அமைதியாக சென்றுவிட்டார்கள். "என்னடா சேகர் எழுந்திருச்சு ஒரு குத்தாட்டம் போடுடா..." என்று கிண்டலடித்தபடியே அவனிடம் "க்ஆ..க்ஆ.." என்று பெண்மையில் அனைவரும் கோரசாக சிணுங்கிக் காட்டினார்கள். தனக்குள் பெண்மைத்தனம் ஒளிந்திருப்பதை கண்டுபிடித்த நண்பர்களின் கிண்டலில் தினமும் மனதுக்குள் கதறிக்கொண்டிருந்தான் சேகர்.

"டேய் இங்க வச்சி எவ்வளவு வேணுமுன்னாலும் கிண்டல் பண்ணுங்கடா... பரவாயில்லை... ஆனா பொண்ணுங்க முன்னாடி மட்டும் சொல்லிக்காட்டாதீங்கடா...". "நாங்க சொன்னாத்தான் அவங்களுக்கு தெரியணுமாக்கும் ..க்.ஆ... போடி.."

தனக்குள் பெண்மைத்தனம் ஒளிந்திருப்பதை அப்பா அம்மாவுக்கு கூட இன்னும தெரியாமல் வைத்திருந்தான் சேகர்.

பள்ளிப் பருவம் முழுவதும் விடுதியிலே கழித்துவிட்டான். வீட்டுல இருந்ததை விடவும் விடுதியிலதான் அதிகமாக இருந்திருக்கின்றான்... 12ம் வகுப்பு படிக்கும்பொழுதுதான் முதன் முதலில் தனக்குள் வந்த பெண்மையை உணர்ந்தான் சேகர். அரசல்புரசலாய் சக தோழர்களுக்கு தெரிய ஆரம்பித்தாலும் பெண்கள் போல பேசுவது போலவும் அவர்களைப் போல நடிப்பதைப் போலவும் நடித்து தனக்குள் உள்ள பெண்மையை மறைத்துக் கொண்டிருந்தான். ஆனால் கல்லூரியில் அப்படியல்ல. கிட்டத்தட்ட நண்பர்கள் அனைவருமே ஊர்ஜிதம் செய்துவிட்டார்கள் அவன் அரவாணி என்பதை.

“அலி வர்றான் பாரு.. அலி வர்றான் பாரு.. ”
என்று கிண்டலடித்தபடியே அவன் வந்தால் விலகி ஓடினார்கள். அதிலும் தணிகை தான் அதிகமாய் கிண்டலடிப்பான்..

“சார் சேகர் நாளைக்கு காலேஜ் வரமாட்டான்”

“ஏன்ப்பா”

“அவனுக்கு கூத்தாண்டவர் கோயில்ல திருவிழா இருக்கு என்று கூறி அவமானப்படுத்துவான். அவன் மீது கல்லெறிவது. அவன் எதிரில் வந்தால் இளித்துக் காட்டுவது என்று சேகருக்குள் பெண்மையிருப்பதை கல்லூரிக்குள் டமாரமடித்ததே தணிகைதான். சேகரும் தணிகையிடம் தனியாக கெஞ்சிப் பார்த்துவிட்டான்.

எங்கே கண்டுபிடிச்சிருவாங்களோன்னுதான் நான் யார் கூடயும் சரியா பேசாம இருக்கேன்.. டேய் காலேஜ் முடியுற வரைக்குமாவது இது யாருக்கும் தெரியாமல் இருக்கட்டும்டா... படிப்பை வச்சாவது ஏதாவது வேலை தேடிக்கிடுவேன்.. அதுவும் இல்லைனா எங்கள மாதிரி ஆளுங்க ரெயிலில் பிச்சை எடுக்குற மாதிரி ஆயிறும்டா...

Jurasic park, King Kong, Anaconda - மிருகங்கள் படத்தையெல்லாம் பார்த்து கைதட்டுறீங்க என் மனித உணர்ச்சிகளை புரிஞ்சிக்க மாட்டிருக்கீங்களடா?

“நான் இப்படி பொறந்தது என் தப்பு இல்லை… என்னைப் புரிஞ்சுக்கோங்க… எனக்கும் உங்களமாதிரிதாண்டா எல்லா உணர்ச்சியும் இருக்கு…. கிண்டல் பண்ணாதடா” கண்ணீர் வராமல் கதறிக்கொண்டிருந்தான் சேகர். அந்த நேரத்தில் சேகருக்காக பரிதாபப்படுபவனைப்போல் நடித்துவிட்டு, கல்லூரியில் வைத்து அவனை கிண்டலடிப்பதை அதிகப்படுத்திக்கொண்டே வந்தான் தணிகை..

ஒரு நாள் தமிழ் வகுப்பு நடந்து கொண்டிருந்தது. தமிழ் வகுப்பில் எல்லா பிரிவு மாணவர்களும் ஒன்றாய்க் கூடுவார்கள். அந்த நேரத்தில் கடைசி பெஞ்சில் அமர்ந்து கொண்டிருந்த சேகரின் வயிற்றில் தணிகை குத்த, திடீரென்று அவன் குத்தியதால் அந்த இடத்திற்குண்டான இயல்பான உணர்ச்சியில் ஆ..என்று பெண்மை வெளிப்பட கத்தினான் சேகர். அனைவரும் சிரிக்க ஆரம்பிக்க. மறுபடியும் மறுபடியும் இதனைத் தொடர மற்றவர்களுக்கு மெல்ல மெல்ல புரிய ஆரம்பித்தது. தமிழ் ஆசிரியரோ புரிந்து கொள்ளாமல் சேகர் தான் வம்பு செய்கிறான் என நினைத்து சேகரைக் கண்டித்தார்.

சார் ஏதாவது ஒரு பாரா வாசிக்கச் சொல்லுங்க அவன் திணறுவான் சார் என்று தணிகை புகார் செய்தான். அவனை வாசிக்க விட்டு அவனது பெண்மை கலந்த வாசிப்பின் நிலை மூலம், அனைவரும் அவன் ஒரு அரவாணி என அறிந்து கொள்வார்கள் என்று திட்டம் போட்டான் .

“எங்கே வாசி” என்று சேகரிடம் புத்தகத்தை நீட்டினார் ஆசிரியர். கண்ணீரையும் ஆத்திரத்தையும் அடக்க முடியாமல் வாழாவெட்டியாய் திரும்புகின்ற மகளை பார்த்து பார்த்து வேதனையுறும் ஒரு தந்தையின் வலியை சுமந்து கொண்டு, முன்னால் சென்று அவன் வாசிக்க வாசிக்க அவனது பெண்மை மற்றவர்களுக்கு தெரிய ஆரம்பிக்க ஆசிரியர் உட்பட வகுப்பறையே சிரித்துக் கொண்டிருக்க முற்றிலுமாய் பிணமாகிப்போனான் சேகர்.

ஓ அவனா.... நீ... சொல்லவேயில்லை. ஏடி வந்து உட்காருடி... ஓ....ன்....ப....து...

கைகளை நெஞ்சுக்கு முன் கொண்டு வந்து உரசிக்காட்டி... இப்படி ஒவ்வொரு திசையிலிருந்தும் கிண்டல்கள். குளிரில் நடுங்கும் நாய்களுக்கு கூட இடமளிப்பவர்கள், ஒரு மனிதன் அங்கே அவமானத்தில் நடுங்கிக் கொண்டிருப்பது தெரியாமல் போயிற்று. இடையில் தணிகை எழுந்து சேகரின் பெண்மை கலந்த நடையைப் போல நடந்து காட்டி மராப்பை விலக்கி இழுத்து விடுவதைப்போல நடித்துக் காட்டினான். பின் வகுப்பு தோழி பார்வதியிடமிருந்து மல்லிகைப்பூவை வாங்கி சேகரிடம் கொடுத்து வைக்கச் சொன்னான் தணிகை. ஒட்டுமொத்த மாணவர்களும் மாணவிகளும் அங்கு இருந்த ஆசிரியரும் அந்த வகுப்பறையைக் கடந்து சென்ற அறிவியல் டீச்சர் மல்லிகாவும் பக்கத்து வகுப்பறை சுப்ரமணி வாத்தியாரும் இதனை வேடிக்கைப் பார்த்தபடி சிரித்துக் கொண்டிருக்க தனது வகுப்பறைச் சிரிப்பொலி அதிகப்பட்டதால் போலியாய் அதட்டி கூட்டத்தை கலைத்து அனுப்பினார் தமிழ் வாத்தியார்.

அவமானம் தாங்கமுடியாமல் குறுகிப்போய் அழுதுகொண்டிருந்த சேகரின் அழுகையிலும் பெண்மையைக் கண்டுபிடித்து சிரித்துக் கொண்டிருந்தன சில மிருகங்கள். மறுநாள் விடுதியில் பரபரப்பு. இரண்டாம் மாடியை நோக்கி மாணவர்கள் ஓடிக்கொண்டிருக்கின்றார்கள். அறை எண் 305 ல் இரண்டாவது முறையாய் பிணமாய்த் தொங்கிக் கொண்டிருந்தான் சேகர். சுற்றியுள்ளவர்கள் ஆச்சர்யமாய் பார்த்தார்களே தவிர அழுகை வரவில்லை. தணிகை தூரத்திலிருந்து எட்டிப்பார்த்துவிட்டு தனது பிகர் பார்வதி வரும் நேரம் என்பதால் சென்றுவிட்டான்.

கயிறு இறுக்கினால் நானும் மனிதனைப் போல்தான் செத்துப் போவேன் புரிந்து கொள்ளுங்கள்

இப்படிக்கு
சேகர் என்கிற மனிதஜென்மம்
என்று கடிதம் காற்றில் படபடத்துக்கொண்டிருந்தது.

என்னங்க இன்னிக்கு சாயங்காலம் ஷாப்பிங் போகலாமா......கையில் காபியுடன் சமையலறையிலிருந்து வந்து கொண்டிருந்தாள் தணிகையின் மனைவி பார்வதி.

இல்லைப்பா ஒரு முக்கியமா ன US ப்ராஜக்ட் இருக்கு க்ளைண்டு சாட்டிங்கல வர்றாரு நைட் உங்க குடும்பம் இந்தியாலதான் இருக்கு மறக்காதீங்க... நாளைக்கு நம்ம பாஸ்கருக்கு 12 வது பிறந்தநாள்..

அட மறந்துட்டேன் சாரிப்பா... சரி சாயங்காலம் ரெடியாயிரு போவோம்.... பாஸ்கரையும் டியுசன் முடிஞ்சி சீக்கிரமா வீட்டுக்கு வரச்சொல்.

மாலை போத்தீஸின் வாயிற்படி தேவதைகள் வரவேற்க உள்ளே நுழைந்தார்கள்.

பாஸ்கர் விரும்பி அணியும் ஜீன்ஸ் சட்டை பகுதியில் துழாவிக்கொண்டிருந்தார்கள் தணிகையும் பார்வதியும்.

பார்வதி! அங்க பாரேன் பாஸ்கரை, சுடிதாரை ரசிச்சிக்கிட்டு இருக்கான்...பாஸ்கரை ரசித்தபடி பார்வதியிடம் சொல்லிக்கொண்டே அப்பொழுது ஒலித்த அலைபேசியை எடுத்தான் தணிகை

என்னடா அதிசயமா இருக்கு திடீர்னு போன் பண்ற..

இல்லைடா காலேஜ் ஞாபகம் வந்திச்சு அதான் உனக்கு பண்ணினேன்.. சேகர் இறந்து இன்னியோட 15 வருசம் ஆகுதுடா நண்பன் ப்ரேம் சொல்லிக்கொண்டிருக்க

அதிர்ச்சியில் மறுபடியும் பாஸ்கரைப் பார்த்தான் தணிகை. இன்னமும் சுடிதாரை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான் பாஸ்கர்

ரசிகவ் ஞானியார்
rasikow@gmail.com

## எழுதுகோல் - ஒரு பழைய சிந்தனை புதிதாக



சில வாரங்களாக பேனா பயன்படுத்துவதை தவிர்த்து பென்சில் பயன்படுத்த துவங்கினேன் எழுதுவதற்காக. காரணம்!! வாரத்திற்கு இரண்டு பேனாக்களேனும் காணாமல் போய்விடுகின்றது. ஒன்று நானே மறதியில் எங்கேனும் வைத்துவிடுகின்றேன், அல்லது யாரேனும் எடுத்துக்கொள்கின்றார்கள் (சுடப்பட்டுவிடுகின்றது). வியப்பாக பென்சில் பயன்படுத்த துவங்கிய மூன்று வாரத்தில் இரண்டு பென்சில்களும் மேஜையிலேயே இருக்கின்றது எங்கும் தொலையாமல், யார் கண்ணும் படாமல், யார் கண்ணிலும் படாமல்.

மூன்றாம் வகுப்பு முடித்து எப்போது நான்காம் வகுப்புக்குள் காலெடுத்து வைப்போம் என்று ஆவலாக இருந்த நாட்கள் உண்டு. காரணம் நான்காம் வகுப்பில் தான் பேனாக்கள் மூலம் நோட்டுகளில் எழுதலாம். அதுவரையில் பென்சில் தான். அப்படி பென்சில்களால் எழுதினால் தான் கையெழுத்து நன்றாக வரும் என்றது பள்ளி நிர்வாகம். பள்ளிகளில் பேனா என்பது மிக குறைந்ததாகவே இருந்தது. அதுவும் மை பேனா தான் அதிகம். பால்பாயின்ட் பேனாக்கள் புழக்கம் அன்றைய காலகட்டத்தில் மிக அரிது. ஒரே மை பேனா வருடக்கணக்கில் கூட வரும். ஹீரோ பேனாக்கள் மிக பிரபலம். இன்று உலகமே பால்பாயிண்ட் பேனாவில் சுழல்கின்றது. (இனி பேனாக்கள் என்பது பால் பாயிண்ட் பேனாவினை குறிக்கும்)

இணையத்தில் பேனா பயன்படுத்துவது நல்லதா பென்சில் பயன்படுத்துவது நல்லதா என ஏதேனும் கட்டுரை இருக்கின்றதா என தேடிய போது ஏதும் சரியாக சிக்கவில்லை.ஆனால் சில பல தகவல்கள் சற்றேனும் சிந்திக்க வைத்தது. சராசரியாக ஒரு பேனா நிறுவனம் தினமும் தயாரிக்கும் பேனாக்கள் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? சுமார் ஒரு மில்லியன் பேனாக்கள். 1 மில்லியன் என்றால் பத்து லட்சம் பேனாக்கள். அந்த நாட்களில் ஒன்று அல்லது இரண்டு பேனா நிறுவனம் மட்டும் போட்டியில் இருந்தது. குறிப்பாக ரெனால்ட்ஸ். ஆனால் இன்றோ சந்தையில் ஏகப்பட்ட நிறுவனங்கள்.

செல்லோ,ரோடோமேக், பார்கர், ரெனால்ட்ஸ், ஆட்ஜெல் என்று நிரம்ப. பேனாவிற்கு நடிகர்களையும் கிரிக்கெட் வீரர்களையும் வைத்து விளம்பரம் செய்கின்றார்கள் என்றால் எத்தனை இலாபம் சம்பாதிக்க வேண்டும்.

சரி, கணக்கிற்கு வருவோம். புகழ்பெற்ற தேசிய அளவிலான நிறுவனங்கள் பத்து (10) இருக்கின்றது என்றால், உள்ளூர் பேனா நிறுவனங்கள் மொத்தம் பத்து என வைத்துக்கொள்வோம்.ஆக மொத்தம் இருபது நிறுவனம். நம் தோராய கணக்கிற்கு.

ஒரு நாளைக்கு - 10 லட்சம் * 20 நிறுவனம் = 200 லட்சம் = 2 கோடி பேனாக்கள் தயாராகின்றது.

2 கோடி * 365 = 730 கோடி பேனாக்கள் ஒரு வருடத்தில் தயாரிக்கப்படுகின்றது என்றால் அதே அளவு விற்பனையும் நடக்கின்றது. அதே அளவு கழிவுகளாகவும் வெளிவருகின்றது. எழுதி முடித்த பேனாக்களாகவோ, பாதி எழுதி முடித்த பேனாவாகவோ. இதுவரையில் நாம் பேனாவினை ஒழுங்காக அப்புறப்படுத்தி உள்ளோமா?

இந்த 730 கோடி பேனாக்கள் மீள் உபயோகம் (recycle) செய்யப்படுவது இல்லை. அதற்கான ஏற்பாடுகள் இதுவரை இல்லை. அது அரசின் கவனத்தில் இருக்கின்றதா என தெரியவில்லை. பேனாவின் அனைத்துப்பகுதியும் ப்ஸாஸ்டிக் பொருளில் தான் செய்யப்பட்டு இருக்கின்றது. பேனா மூடி, பேனா பின் மூடி, பேனா நடுபகுதி, பேனா முனை (ஸ்டீல்), பேனா ரீபில் பகுதி என அனைத்தும் ப்ளாஸ்டிக்கால் தான் செய்து இருக்கின்றார்கள். குவிந்து இருக்கும் குப்பைகளில் இதெல்லாம் ஒரு கணக்கா அட விடுப்பா என எண்ணலாம்.

ஏதோ நம்மால முடிந்தது. எல்லா சுற்றுசூழல் பாதிப்பிற்கும் ஒரு மாற்று தீர்வு இருக்கத்தான் செய்கின்றது. ஆனால் நடைமுறை சாத்தியங்கள், ஏற்கனவே பழக்கப்பட்டு சோம்பேறிகளாகிவிட்டதன் காரணமாகவும் மாற்றுத்தீர்வுகளுக்கு மாறுவதே கடினமாகிவிடுகின்றது. பேனாவிற்கு மாற்று தீர்வு என்ன?

அட பேனாவிற்கு முன்னர் வந்த பென்சில் தான் இருக்கே. பென்சில் விலை குறைவு. அதன் மீதப்பகுதி எந்த தீங்கும் விளைவிப்பதில்லை. பேனாவின் அதே அளவு எழுதும். விரல்களுக்கு அழுத்தம் அதிகம் இல்லை. வேண்டுமானால் திருத்திக்கொள்ளலாம். ம்ம் புரிகின்றது பென்சில் பற்றி உங்களுக்கு தெரியாதா என்ன அதையும் விளக்க வேண்டுமா? பென்சில்கள் தயாரிக்கவும் மரங்கள் பயன்படுத்துகின்றார்களே என ஒரு கூட்டம் நினைப்பது கேட்கின்றது.

வெட்டிய இடத்தில் மரத்தை வளர்க்கலாமுங்க ஆனால் ப்ளாஸ்டிக் கொட்டிய இடத்தில் ஏதும் வளர்க்க இயலுமா? அத்தனை கழிவுகளையும் என்ன செய்ய? அது வீட்டின் சந்துகளிலும், முடுக்குகளிலும் இருந்து கொண்டே தான் இருக்கின்றது. இன்று கூட ஒவ்வொரு வீட்டின் உள்ளும் தேடிப்பாருங்கள் குறைந்தது 20 பேனாவாவது கிடைக்கும்.

கணினியின் பிரவேசம் எழுதுவதை அதிகமே குறைத்துவிட்டது. இப்போது எழுதுவதே குறைவு தான். அங்கும் பேனாவில் எழுத வேண்டாம் என்றால் எப்படி? பேனாவின் பயன்பாடே வேண்டாம் என சொல்லவில்லை, அது சாத்தியமும் அல்ல.

நிரந்தரமாக இருக்க வேண்டிய எழுத்துக்கள், கையெழுத்துக்கள் போட மட்டும் பேனா பயன்படுத்தலாம். அதிக அளவு பென்சில்களால் எழுதுவோம். பாதி அளவு கழிவினை குறைத்தாலும் அது நமக்கு வெற்றி தான்.

இந்த தகவல் சரியென தோன்றினால் இன்றே செயல்பட துவங்குங்கள். ஆரம்பத்தில் சிரமமாக இருக்கலாம். நம்மால் முடிந்த சிறு காரியம். ஒவ்வொரு அலுவலகத்திலும் அறிவுறுத்தலாம். ஆனால் தனிமனித புரிதல்களின்றி எந்த மாற்றமும் சாத்தியமன்று.

முடிப்போம். வாருங்கள் எழுதுவோம் புதிய வரலாறுகளை !!!

**விழியன்**
vizhiyan@gmail.com

## தாய்நாட்டின் அகதிகள் (கட்டுரையில் வரும் பெயர்கள் அனைத்தும் கற்பனையே)

நெஞ்சு பொறுக்குதில்லையே

இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்....



“மென்பொருளாளன்” “கோடிகளின் அதிபதி” “பணத்தில் புரள்பவர்கள்” என நொடிக்கு நொடி பல பெயர்களால் அழைக்கப்படும் மென்பொருள் பொறிஞர்களின் வாழ்வினைப்பற்றிய ஒரு நிலையாமை கட்டுரையே இது. பல லட்சங்களில் சம்பளம், பூங்கா, கடற்கரை, இதுதான் எம் போன்ற மென்பொறியாளர்களினைப்பற்றிய பலரின் கருத்து. ஆனால் இதில் இருக்கும் நிலையாமை????, இன்று பணிக்குச்சென்று இருக்கையில் அமர்ந்து மாலை 6.30, 7.30, 10, 12 மணிவரை கடுமையாக உழைத்துவிட்டு பின்னர் வீடு திரும்பும் மென்பொறியாளனுக்கு நாளை விடியலில் அவன் பணி அவனுக்கு உண்டா என்பதில் எந்த நிச்சயமான நம்பிக்கையும் இல்லை. இந்த பணியில் நான் சேர்ந்து ஒன்றரை வருடங்களே ஆகின்றன. இதற்குள் நான் சந்தித்த நண்பர்களின் அனுபவங்கள், சில சொந்த அனுபவங்கள், கசப்புகள் இவற்றின் தொகுப்பே இந்த விளக்கக்கட்டுரை.

சாந்த குமார் என்றொரு தோழன் எனக்கு உண்டு, என்னைப்போலவே இந்தியாவின் உயரிய தொழில்நுட்பப்பயிலகமான இந்திய தொழில்நுட்பக்கழகம் (ஐஐடி) ஈன்ற ஒரு ஈடிலா செல்வம் அவன். ஒரு புகழ் பெற்ற இந்திய மென்பொருள் நிறுவனத்தில் பணிக்கு அமர்ந்தான். ஏதேதோ கற்பனைகள் அவனுக்கும் அவனைச்சார்ந்தவர்களுக்கும்.

மகன் மென்பொருள் நிறுவனத்தில் பணிக்கு அமர்ந்துவிட்டான், இனி நம் குடும்பத்திற்கு கவலை இல்லை, தங்கையின் திருமணத்தினை, தமக்கையின் திருமணத்தினை அவனே பார்த்துவைப்பான். தம்பிக்கும் அண்ணனுக்கும் ஒரு நல்ல பணியினை அவனது பணியின் ஆளுமையில் வாங்கிக்கொடுப்பான், வீடு கட்டலாம், மகிழ்வுந்து வாங்கலாம், அயல்நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செல்லலாம், இதுபோன்ற பல்வேறு கனவுகளுடன் அவன் பெற்றோர். நான்கு வருடங்கள் நன்றாகவே சென்றது, பெங்களூரில் சொந்தமாக வீடு வாங்கினான் கடனில், மகிழ்வுந்து வாங்கினான் கடனில், வீட்டிற்கான உபகரணங்கள் அனைத்தும் கடனில். ஒரு வாரத்தின் திங்கட்கிழமை, சந்தோசமாக தன் மகிழ்வுந்தில் பணிக்குச்சென்றவன் காலை முழுதும் இனிமையாய் தன் பணிகளை செய்துவிட்டு மதிய உணவிற்காக நண்பர்களுடன் ஒரு உணவகத்தில் அமர்ந்து உரையாடிக்கொண்டே உணவு உண்டுகொண்டிருந்தபோதுதான் அந்த தொலைபேசி அழைப்புவந்தது. இரண்டு நிமிடங்கள் பேசி இருப்பான், அவன் முகத்தில் ஒரு மாற்றம், திரும்பிவந்தவன் எதுவும் பேசாமல் நண்பர்களிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு அலுவலகம் திரும்பினான்.

அடுத்த பதினைந்தாவது நிமிடம் அவனுடைய மடிக்கணினி, அடையாள அட்டை அனைத்தையும் மடித்து எடுத்துக்கொண்டு வந்து அலுவலக வாயிலில் இருந்த காவலாளியிடம் கொடுத்துவிட்டுக்கிளம்பிவிட்டான். என்னவாயிற்று என்று யாருக்கும் தெரியவில்லை, அன்றுமாலை அவனைக்கண்டு பேசியபோதே தெரிந்தது, தொலைபேசியில் அழைத்த அவனது மேலாளர் அடுத்த அரைமணிநேரத்தில் அவனை பணிவிடைபெற்று புறப்படும்படி வேண்டிக்கொண்ட தகவல்.

அவனது கடன்கள்? கனவுகள்??? அனைத்தும் கனவாய் இன்று அவன் தெருவில் நின்று வேலை தேடிக்கொண்டிருக்கும் அவலம். அன்றே புரிந்தது எமக்கு, இந்தப்பணியில் நிரந்தரமில்லை, நம் வாழ்வினைப்போல் நிரந்தரமற்ற ஒன்று. வெளியில் இருந்து மக்கள் பார்த்து பொறாமைப்படுவதுபோல் இந்தப்பணி அவ்வளவு இனிமையான சொகுசான ஒன்றல்ல. பணி நிமித்தம் இரவு பகல் பாராது உழைக்கவேண்டும். பணி கொடுப்பவர் அயல்நாட்டினரே பெரும்பாலும் என்பதால் நேர ஒருங்கிணைவு அதிகம் இருப்பதில்லை, பணி கொடுப்பவர் அமெரிக்க நாட்டவராய் இருந்தால் இரவுகளிலும் அவர்களிடம்

உரையாடுவதற்காக அலுவலகத்தில் இருக்கவேண்டும், இந்திய நேர இரவே அவர்களின் பகல், எனவே இரவு உறக்கம் கெட்டு, உடல் நலம் கெட்டு, சக்கையாக பிழியப்பட்டு வெளியில் வரும் மனிதனுக்கு சம்பாதிக்கும் பணத்தினை அனுபவிக்க நேரம் இல்லை, வார இறுதிகளிலும் சில நேரங்களில் பணிமுடிக்கும் அவசியம் இருந்தால் சனி, ஞாயிறிலும் அலுவலகத்திலேயே இருக்கவேண்டும்.

குடும்பம், குழந்தை, உறவுகள், நட்பு அனைத்தையும் இழந்து பணத்தின் பின்னாலேயே நடந்து அந்த பணத்தினை அனுபவிக்க முடியாது, அவலமாய் நிற்கும் நிலையே ஒரு மென்பொருளாளனின் நிலை. இது சாந்தகுமார் ஒருவனுக்கு மட்டுமே நிகழ்ந்த நிகழ்வாக எண்ணவேண்டாம், நம் ஒவ்வொருவருக்கும் இந்த நிலையே என்றும். சொந்த நாட்டின் அகதிகளாய் இன்று சாந்தகுமாரைப்போன்ற பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், நம் நாட்டின் நம் ஊரின் வீதிகளில் நமக்குப்பக்கத்திலேயே கூட நடந்துகொண்டுதான் இருக்கின்றனர் தமது அடுத்த இலக்கினை நோக்கி இலக்கில்லாமல். மனவுளைச்சல், தூக்கமின்மை, குடும்பத்தில் விரிசல், மனைவியை, மக்களை பிரிந்து இன்றும்.

தன் அடுத்த வழியை வாழ்க்கையை தேடும் இளைஞனை, இந்த கட்டுரையை படித்த பின்பேனும் தயவு செய்து பொறாமை கண் கொண்டு நோக்காதீர்கள், நேற்று ஒரு சாந்த குமார், இன்று ஒரு சங்கீதா நாளை நீங்களோ அல்லது நானோ??????

இதனைப்படிக்கும் மென்பொருளாளரல்லாத மற்றபணியிலிருக்கும் தோழர்களுக்கு நான் கூறிக்கொள்வதெல்லாம் இது ஒன்றே, அரசுப்பணியில் இருப்பவர்களுக்கேனும் பணி நிரந்தரம், பணிப்பாதுகாப்பு உண்டு, எங்களுக்கு அது என்றுமே இல்லை, எங்களை பரிதாபமாக பார்க்கவேண்டாம், பொறாமையாகவேனும் பார்க்காமல் இருங்களேன், நாங்களும் உங்களைப்போன்ற உங்கள் நண்பர்களே....

ஒரு மென்பொறியாளனாய்,
பெங்களூரில் இருந்து,

சிவா....
sivasankar.iitg@gmail.com

## ஊர்மிளையின் புலம்பல் - கட்டுரை

இராமாயணத்தில் ஒரு மறக்கப்பட்ட முக்கிய கதா பாத்திரம் ஊர்மிளை. சீதையின் தமக்கையான ஊர்மிளை இலக்குவனுக்கு மனைவியானாள். இராமாயணத்தை நாம் படிக்கும் போது தசரதன் முதல் இராமர், சீதை, இலக்குவன், அனுமன், இராவணன், பரதன் என பல பாத்திரங்களைப் பற்றி தெரிந்துக் கொள்கிறோம். அவர்களின் முக்கியத்துவத்தையும் புரிந்துக் கொள்கிறோம். ஆனால் திரைக்குப் பின்னால் மறைக்க, மறக்கப்பட்டிருக்கும் ஒரு அபலையின் கண்ணீர் கதையை நாம் மறந்துவிடுகிறோம். அவளது மன ஓட்டம் எப்படி இருக்கும் என்பதுதான் இந்தக் கட்டுரையின் கரு. ஊர்மிளையின் இருவேறு மனநிலைகளில் எழுதப்பட்டுள்ளது.

**ஊர்மிளையின் புலம்பல் - 1**

அகன்ற மாடமாளிகையில் நின்று சீதையின் வரவை எதிர்பார்த்திருந்தாள் ஊர்மிளை. அயோத்தி மாநகர் முழுவதும் தீபங்கள் ஏற்றப்பட்டிருந்தது திருமகளை வரவேற்க. நகர் முழுவதுமான தீப ஒளி இலக்குமியின் வரவை அறிவிப்பது போன்று எங்கும் நிறைந்திருந்தது. தமக்கையே உனக்கு தெரியும் உன் மேல் எனக்கு எவ்வளவு அன்பு என்று? சிறு வயது முதலே நீ தான் உலகமென்று இருந்தேன். அது தெரியுமா உனக்கு. என் கணவனை விடவும் மேலாக உன்னையன்றோ நான் நேசித்தேன். அன்னை முகம் நானறியேன். நீயே தாயென, தெய்வமென நான் நினைத்தது உனக்கு தெரியாது.

இதோ இன்றோடு பதினான்கு ஆண்டுகள் முடிந்துவிட்டது உன்னைக் கண்டு. நீயோ இராமன் மேல் கண்டதும் காதல் கொண்டாய். நானோ உன்னை தினம் காணும் ஆசையால் தானே உன் கணவனின் தனயனை மணந்தேன். ஆனால் தமக்கையே, நீ உன் கணவன் வழி நடந்த போது என்னிடம் ஒரு வார்த்தை கேட்டிருக்கலாமே!

ஊர்மிளை, என் தங்காய், என்னை பிரிந்து நீ வாடிப் போவாயோ என்று? என் அன்பிற்காக அன்று நீ ராமனுடன் செல்லாமல் இருந்திருந்தால் ஐயகோ! இன்று தீ இறங்கி உன் கற்பை நிரூபிக்கும் அவலம் நேர்ந்திருக்குமா? உன்னை தொட்ட நெருப்பு என்னை சுட்டுவிட்டதே தமக்கையே!

சிறு வயதிலிருந்தே மாட மாளிகையில், தங்கக் கட்டிலில் பட்டு மெத்தையில் உறங்கி, வைர கொட்டிலில் நீராடி, வெள்ளி தட்டினில் ஊண் உண்டு வாழ்வில் கஷ்டம் என்றால் என்னவென்றெ அறியாமல் வாழ்ந்த நீ, காட்டில். மேட்டில் எப்படி எல்லாம் வாடி வதங்கினாயோ? இந்த கொடுமையான வாழ்வை தரவா கோதண்டம் ஒடித்து உனை மணந்தான் உன் கணவன்? உன்னை சிறை வைத்திருந்த அசோக வனத்தில் அன்னையே, நீ உண்டாயோ, உறங்கினாயோ? என்ன கொடுமை இது? என் உள்ளம் எல்லாம் உன் துன்பங்களை எண்ணி எண்ணி ஏங்கி போனது தாயே! இப்போது எப்படி இருக்கின்றாய்? உன் மெல்லிய உடல் மேலும் வாடி வதங்கி போய்விட்டதோ? சொல்லொணா துயரத்திலிருக்கும் நான் இன்று நீ வருவாய் என்ற செய்தி கேட்டே உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். விரைவில் வந்து சேர்வாயே என் சகோதரியே.

**ஊர்மிளையின் புலம்பல் - 2**

அகன்ற மாடமாளிகையில் நின்று சீதையின் வரவை எதிர்பார்த்திருந்தாள் ஊர்மிளை. அயோத்தி மாநகர் முழுவதும் தீபங்கள் ஏற்றப்பட்டிருந்தது திருமகளை வரவேற்க. நகர் முழுவதுமான தீப ஒளி இலக்குமியின் வரவை அறிவிப்பது போன்று எங்கும் நிறைந்திருந்தது. தமக்கையே, ஊரெல்லாம் இன்று திருவிழா காண்கின்றது நீ வருகிறாய் என்று. ஆனால் என் உள்ளம் மட்டும் உன்னால் எனக்கு நேர்ந்த துயரங்களையே எண்ணி எண்ணி கண்ணீர் வடிக்கின்றது. உன் தங்கையாக பிறந்ததை தவிர என் தவறு வேறு என்ன என்று எனக்கு இதுநாள் வரை புரியவில்லை.

இராமனை நீ கண் நோக்கி காதல் கொண்டாய். கோதண்டம் ஒடித்து அவன் உன்னை மணந்தான். ஒரு திருமணத்திற்கு இன்னொரு மணம் இலவசம் என்றபடி, இலக்குவனுக்கு என்னை மணம் முடித்தனர். இலக்குவன் மீதான என் எண்ணம் பற்றி சிந்தித்துப் பார்க்க மிதிலையில் ஒரு உயிர் கூட இல்லாமல் போய்விட்டதே! அன்னை போல இருக்க வேண்டிய நீயும் அன்றோ உன் நலன் மட்டும் நோக்கினாய். உன்னால் எனக்கு மணம் முடிக்கப் பட்ட இலக்குவனுக்கு மனைவியை விட இராமன் மேல் அன்றோ மிகப் பிரியம். அண்ணனுக்காகவே உயிர் வாழும் பிறவி அவன். ஒரு துறவி அவன். எனக்கென்று அவன் ஒரு நாளும் இருந்ததில்லையே! உங்களுக்காகவன்றோ வாழ்ந்து வந்தான்.

கடமைக்காக கணவன் மனைவியாக நாங்கள் வாழ்ந்தது எவ்வளவு கொடுமையானதாக இருக்கும் என்று நினைத்துப் பார் என் தமக்கையே!

இராமன் வனவாசம் போக விதி என்று ஒன்று இருந்தது. நீ இராமன் மேல் கொண்ட காதல் உன்னையும் வனவாசம் செல்ல தூண்டியது. இராமன் மேல் கொண்ட பாசத்தினால் இலக்குவனனும் வனவாசம் போனான். இவை கூட நியாயம் என்று ஒரு விதத்தில் சொல்லிவிடலாம். ஆனால் இவற்றால் ஏற்பட்ட விளைவுகளினால் நான் இந்த அரண்மனையில் (அரணால் சூழப்பட்ட சிறையில்) உண்மையான வனவாசத்தில் வாழ்ந்துக்கொண்டிருக்கிறேனே இத்தனை நாட்களாக. இதை யாராவது நினைத்துப் பார்த்தார்களா? நான் பட்ட வேதனைகளை, சோதனைகளை விடவா அதிகம் உனக்கு ஏற்பட்ட சோதனைகள்? நான் செய்த தவறுதான் என்ன?

லாவண்யா
lavanya.sundararajan@gmail.com

## சுவடுகளின் நர்த்தனம்...

ஒவ்வொரு சுவடுகளாக
அழித்தபடி நகர்கின்ற வெப்பக்காற்றின்
வேகம் குறைந்த கணத்தில்
ஆர்ப்பரிக்கும் அலைகள்
அடங்கியிருந்தன.
சிறியதொரு இடைவெளியில்
மீண்டும் கரைகளை அரிக்கத்துவங்கின
அவ்வலைகள்.
அழித்தொழிந்த சுவடுகள் உயிர்ப்பெற்று
நர்த்தனமாடுகின்ற காட்சியை
கண்டுகளிக்க யன்னலின்
வழியே உள்நுழைந்தது
வெண்பிறை.

நிலாரசிகன்
nilaraseegan@gmail.com

## தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடத்தும் “கந்தர்வன் நினைவு சிறுகதைப் போட்டி -2008”

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கடந்த ஆண்டு நடத்தியது போலவே இந்த ஆண்டும் கந்தர்வன் நினைவுச் சிறுகதைப் போட்டியை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

**முதல் பரிசு:** ரூ. 5000

**இரண்டாம் பரிசு:** ரூ. 3000

**மூன்றாம் பரிசு:** ரூ. 2000

மற்றும் தேர்வுபெறும் சிறந்த சிறுகதை ஒவ்வொன்றிற்கும் ரூ. 250 பரிசளிப்படுவதோடு, கதைகள் சிறந்த இலக்கிய இதழ்களில் வெளியிடப்படும்.

**விதிமுறைகள்:**

- ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் எழுதலாம்.
- கதை எழுதியவர், அது தனது சொந்தக் கற்பனையே என்றும் வெளியிடப்படாதது என்றும் உறுதிதந்து, பெயரைத் தனித்தாளில் முகவரி,தொலைபேசி எண்ணுடன் தரவேண்டும் (கதைப்பக்கங்களில் எழுதியவர் பெயர் முகவரி இருக்கக் கூடாது)
- வெளிநாடுகளில் இருப்போர் மின்னஞ்சலில் தொடர்பு கொண்டு, கதைகளை அனுப்பலாம்.

**சிறுகதைகள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி:** 11-09-2008

**சிறுகதைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

நா.முத்து நிலவன்,

(துணை பொதுச்செயலர், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம்)

96, சீனிவாச நகர் 3ஆம் தெரு, புதுக்கோட்டை - 622 004

செல்பேசி: 94431 -93293

மின்னஞ்சல்: naamuthunilavan@yahoo.co.in

## புத்தக அறிமுகம்:

### ஒரு பட்டாம்பூச்சியின் கனவுகள்

ஆசிரியர்: நிலாரசிகன்




"வேடம் போட்டுக் கொள்ளாத வார்த்தைகளால் வாழ்க்கையை விசாரிக்கின்றன இவருடைய கவிதைகள். கிராமங்களின் கீர்த்தனைகளும் நகரங்களின் நர்த்தனங்களும், ஒப்பனையில்லாமல் இவர் கவிதைகளில் உரையாடுகின்றன. நிலாரசிகன் - நெஞ்சின் ஆழங்களில் "மூழ்கி" நினைவு முத்துக்களை ஏந்தி வருகிறார். களங்கமற்ற கவிதை முத்துக்களாய் அவை காட்சியளிக்கின்றன.

தன் கவிதையைத் தேடி இவர் பம்பரக்குதிரை ஏறிப் பயணம் செய்யவில்லை. தனக்குள், தன்னைச் சுற்றி வரும் வாழ்க்கையை இவர் கவிதையாக்குகிறார். நாளைய இலக்கிய உலகத்தின் நட்சத்திரக் கவிஞரை இன்றே தழுவிக் கொள்வதில் என் எழுத்துக்கள் மகிழ்கின்றன." மு.மேத்தாவின் முன்னுரையிலிருந்து.

**விலை:** ரூ.70 **பக்கங்கள்**: 150

**தமிழ்நாட்டில், பிரதிகள் கிடைக்கும் இடம்:**

நியூ புக் ஹவுஸ், தி.நகர், சென்னை

மற்றும் ஹிக்கிங் பாதம்ஸ், லேண்ட்மார்க், நியு செஞ்சுரி புக் ஹவுஸ்.

**தொடர்புள்ள சுட்டி:** http://www.nilaraseeganonline.com/2008/05/blog-post_13.html

## சிற்றிதழ் அறிமுகம்:

### நெய்தல்



மனம் ஈர்க்கும் பொழுது போக்குகளும், திசை மாறும் வாய்ப்புகளும் கூடிக் கிடக்கிற பெருநகரமொன்றில், இலக்கிய காற்றை சுவாசித்துக் கொண்டிருப்பதும், இலக்கிய வாசனையை நாடு முழுக்க பரப்புவதிலும் கவனம் செலுத்துகிற மாணவர் குழுவும் ஆச்சரியப் படுத்தக் கூடியதுதான்.

தமிழகத்தின் முக்கியமான சில பல்கலைக் கழகங்களின் அறிவியல் புலன்களில் ஆராய்ச்சி செய்கிற நண்பர்களின் கூட்டு முயற்சியாகவும் சிறந்த வெளிப்படுத்தலாகவும் புதிய இதழாக வந்திருக்கிறது "நெய்தல்". இம்மாதிரியான சிறு முயற்சிகளே இன்னிதழ்களின் வரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்லும் படியான தடத்தை பதிவு செய்திருக்கின்றன.

கவிதைகள், கட்டுரைகள், நேர்காணல்கள், கவிதைகள் குறித்த ஆய்வுகள் என்று இதழின் பயணம் நேர்மையான பாதையில் தடம்பதிக்கிறது. இரண்டு இதழ்கள் வெளிவந்த சூழ்நிலையில் தொடர்ந்து ஒரு எதிர்பார்ப்பாய் உருவாக்கியுள்ளதை மறுக்க இயலாது. தேவதேவனின் கவிதைகள் குறித்த சங்கர ராமசுப்பிரமணியனின் கட்டுரையும், மருதியும், சார்ந்த கட்டுரையும் இதழ் வெறுமனே போன இலக்கியத்தைப் பேசுவது அல்ல என்பதை உணர்த்தி சமூக அக்கறை என்கிற மாணவ கொந்தளிப்பையும் பதிவாக்கியுள்ளது பாராட்டுக்குறியதாகும்.

இதழ் 2-இல் இடம்பெற்றிருந்த எதிரியின் "முறுவல்" கவிதையும் மற்ற கவிதைகளும் கவிதையின் வேர்கள் ஆழமானது என்பதையும், கவிதைகளின் உயிர்ப்புத் தன்மை

நிலைத்தது என்பதையும் அழுத்தமாக சொல்கிறது. சிற்றிதழ்களின் ஆதார சுருதியாக இருக்கிற கால தாமதம் இந்த இதழுக்கும் நேர்ந்திருக்கிறது.

காலதாமதமாக வருவது தவறல்ல. காலதாமதமானவற்றை குவிக்கிற குப்பையாக இல்லாமல் எப்போது புதுமையில் வெளிச்சமாக வந்து கொண்டிருப்பது சிறப்பே.

எவ்வளவோ சிரமங்களின் நசுக்கலுக்கிடையில்தான் “நெய்தல்” வளர்கிறது. எனினும் தொடர்ந்து வரவேண்டும். அப்படி தொடர்ந்து இம்மாதிரியான இதழ்கள் வந்து கொண்டிருந்தால்தான் இலக்கியத்தின் மீது வேர்பிடிப்பான நம்பிக்கை பலப்படும்.

**இதழ்:** நெய்தல்

**தனி இதழ்:** ரூ 10

**முகவரி:**
நெய்தல்
மு.புத்தூர் அஞ்சல்
தொட்டியம் வட்டம்,
திருச்சி - 621203.
9840529274

## இருதயத்திற்கு இருதயம் தேவை




நண்பர்களுக்கு,

வனவாசியை சேர்ந்த மாயவன் என்கிற இந்த தெருக்கூத்து கலைஞர் சுவாசத்தில் அடைப்பு ஏற்பட்டு கஷ்டப்படுகிறார்.

70 வயதான இந்த கலைஞருக்கு தங்குவதற்கு வீடு இல்லை. தனி மரமான இவரது இருதய அறுவை சிகிச்சைக்கு ரூ. 15000 தேவைப் படுகிறது.

உதவ விரும்பும் அன்பர்கள் கீழ்கண்ட ஐ.சி.ஐ.சி.ஐ வங்கிக் கணக்கிற்கு பணம் அனுப்பலாம்.

A/c No: 611901517766
V.Shunmugapriyan,
ICICI Bank, Salem Shevapet Branch

**மேலதிக தவலுக்கு:**
மு.ஹரிக்கிருஷ்ணன் (9894605371)